1. வேற்றுமை உருபுகள் எத்தனை வகைப்படும்?

   A. 5
   B. 6
   C. 7
   D. 8

2. வாக்கியங்களில் இரண்டாம் வேற்றுமை உருபைக் கொண்டுள்ள சொல்லைத் தெரிவு செய்க.

   A. புனிதா கடைக்குச் சென்றாள்.
   B. திருமதி.பானு மீன் கறி சமைத்தார்.
   C. மீனவன் வலையை வீசினான்.
   D. மேசை தச்சனால் செய்யப்பட்டது.

3. கீதாவின் வீணை உடைந்து விட்டது. _____________ அவள் அதனைப் பழுது பார்க்க எடுத்துச் சென்றாள்.

   A. ஆனால்
   B. ஆகவே
   C. எனினும்
   D. இருப்பினும்

4. கபிலன் சிறந்த கவிதைகளை இயற்றினான். ______________ அவனுக்கு விருது வழங்கப்பட்டது.

   A. இருப்பினும்
   B. எனினும்
   C. ஆனால்
   D. எனவே

LIVEWORKSHEETS

5. வாக்கியத்தில் கோடிடப்பட்டுள்ள சொல் ஏற்றுள்ள வேற்றுமை உருபைத் தெரிவு செய்க.

மேசை தச்சனால் செய்யப்பட்டது.

A. முதலாம் வேற்றுமை

B. இரண்டாம் வேற்றுமை

C. மூன்றாம் வேற்றுமை

D. நான்காம் வேற்றுமை

6. வாக்கியங்களில் பிழையான வினைமரபு சொற்களைத் தெரிவு செய்க.

A. தேவி மலரைக் கொய்தாள்.

B. வேடன் அம்பை எய்தினான்.

C. திருமதி.கமலா கூடையை முடைந்தார்.

D. குயவன் பானையைச் செய்தான்.

7. கீழ்க்காண்பவற்றுள் முன்னிலை இடத்தைக் குறிக்காத சொல்லைத் தெரிவு செய்க.

A. அவன்

B. உன்

C. நீர்

D. உமது

8. கொடுக்கப்பட்ட சொற்பட்டியலில் சரியான ஒரே பொருள் தரும் சொற்களைத் தெரிவு செய்க.

A. தந்தை, அம்மா, பிதா

B. உணவு, ஆகாரம், சாப்பாடு

C. உலகம், நண்பன், பூமி

D. ஆசிரியர், ஆசான், தோழன்

LIVEWORKSHEETS

9.



மேலே உள்ள படம் குறிக்கும் இரட்டைக்கிளவியைத் தெரிவு செய்க.

A. மட மட  B மினு மினு  C. கிலு கிலு  D. தக தக

10. சரியான இடைச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

வேலுக்குக் காய்ச்சல் கண்டது.________________அவன் பள்ளிக்குச் செல்லவில்லை.

A. ஏனென்றால்

B. ஆகையால்

C. இருப்பினும்

D. அல்லது

LIVEWORKSHEETS